புலவர் கா. கோவிந்தன் : மதுரையில் அமையவிருக்கும் பல்கலைக் கழகத்திற்கு திருவள்ளுவர் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பெயரிடும் கட்டம் இன்னும் வரவில்லை.

Agricultural loan

* 392 *Q.*—**Sri M. KALYANASUNDARAM :** Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the amount of agricultural loan sanctioned to Sri C. Purushothama Reddiar, M.L.A., of Pondicherry on the security of lands owned by him in some villages in Cuddalore taluk of South Arcot district about nine years ago;

(*b*) the amount of principal and interest recovered so far; and

(*c*) the amount of arrears due from him as on 1st December 1963?

The Hon. Sri P. KAKKAN : (*a*) *to* (*c*) A statement[a] is placed on the Table of the House.

(அ), (இ) & (உ) : இது குறித்து சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வண்டிகளுக்கான வரி செலுத்தும் விதம்

*393 கேள்வி—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையில் இருப்பது போலவே வெளி மாவட்டங்களிலும் மோட்டார் உரிமையாளர்கள் செக் மூலமாக வரியினைச் செலுத்த ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ஏற்பாட்டினை ஒரு தடவை பரிசீலனை செய்துவிட்டு விட்டோம். இதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்ய அரசாங்கம் உத்தேசிக்கிறது.

நியாய விலைக் கடைகள்

*394 கேள்வி—**திரு. செ. மாதவன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஏற்கெனவே திறக்கப்பட்டிருக்கும் நியாய விலைக் கடைகளை மூடிவிடும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமென்றால் காரணமென்ன ?

---

a Printed as Appendix I on page 334 infra.

25th March 1964]

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: இப்போதுள்ள நியாய விலைக்கடைகளை, தற்போதைக்கு 31—3—1964 வரை நீடிக்கலாமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. இவைகளை மேலும் நீடிப்பதுபற்றி விலைவாசிப் போக்குகள், சப்ளை நிலைமை முதலியவற்றை வைத்துப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

Improvements to Point Calimere

* 395 *Q.*—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to make Point Calimere a Tourist Spot and to set up a Forest Research centre at that place; and

(*b*) if so, the present stage of the proposal?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) & (இ): கோடிக்கரையில் ஓர் ஓய்வு விடுதியைக் கட்ட உத்தேசம் இருந்தது. ஆனால், தேசீய நெருக்கடி காரணமாக அது பின்னர் கைவிடப்பட்டது.

திரு. கோ. சி. மணி: தேசீய நெருக்கடி முடிவதற்குள்ளாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற ஆலோசனை இனிமேலாவது அரசாங்கத்திற்கு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: நான் மூலக் கேள்விக்கு பதில் சொன்ன மாதிரி இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, கோடிக்கரையில் மஞ்சம்பட்டி பள்ளத்தாக்கில் காட்டு எருமை சரணாலயம் நிறுவும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

உத்தமபாளையத்திற்கு ஜில்லா முன்சீப் கோர்ட்

*396 **கேள்வி—திரு. மா. இராசாங்கம்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள உத்தமபாளையத்தில் ஒரு ஜில்லா முன்சீப் கோர்ட்டு ஏற்படுத்த உத்தேசமுண்டா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: இல்லை.

திரு. மா. இராசாங்கம்: என்னுடைய மூலக் கேள்வி உத்தமபாளையத்தில் தாலுகா முன்சீப் கோர்ட் ஏற்படுத்துவதைப்பற்றி இருந்தது. அது மாறி இருக்கிறது. இதிலே ஜில்லா முன்சீப்